[2006 ஆகஸ்ட் 22

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்குமேயானால், விரைவிலே அதிகாரிகளை விட்டு ஆய்வு செய்து, திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், ** திறக்கப்படவில்லை என்று. இங்கே Chief Minister Room–லிருந்தே switch போட்டுத் திறந்த இடங்கள் நிறைய இருக்கின்றன. நீங்கள் அது மாதிரி திறந்திருக்க வேண்டியதுதானே இதையும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

66—

தங்கும் விடுதி மற்றும் சாலையோர உணவகம்

**818—திரு. இல. வேலுசாமி:*

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டத் தலைநகரமாக விளங்கும் தருமபுரியில் தங்கும் விடுதியும், சாலையோர உணவகமும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரியில் தங்கும் விடுதியும், சாலையோர உணவகமும் அமைத்திட எவ்விதச் செயற்குறிப்பும் தற்போது இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, தீர்த்தமலை ஆகிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2006 ஆகஸ்ட் 22]

இரண்டு பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலங்கள் உள்ளன. அங்கே வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் திரள்திரளாக வந்து செல்கிறார்கள். எனவே, தருமபுரி நகரில் தங்கிச் செல்லக்கூடிய அளவுக்கு, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கேற்ப தமிழ்நாடு சுற்றுலாத் துறை சார்பில் தங்கும் விடுதி கட்டப்படுமா என்பதை அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, தருமபுரி, ஓமலூர், தாரமங்கலம் ஆகிய மூன்று தொகுதிகளின் மையப் பகுதியான தொப்பூர் பகுதியில், பிரதான நால்வழிச் சாலையோரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மிகச் சிறப்பாகப் பயணிகள் உணவு விடுதி ஒன்று நடந்து வந்தது. ஆனால், சில ஆண்டுகளாக அது நடைபெறுவதில்லை. சுற்றுலாத் துறையின் சார்பாகப் பயணிகளுடைய நலன் கருதி அந்த விடுதி மீண்டும் ஆரம்பிக்கப்படுமா என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கிருஷ்ணகிரி பகுதியிலும், ஓசூர் பகுதியிலும், ஒகேனக்கல் பகுதியிலும் இந்தத் துறையின் சார்பாக விடுதிகள் இருக்கின்றன. அவையே போதுமானவையாக இத்துறை கருதுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துகளை ஏற்றுக்கொண்டு, துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய இடமான வேளாங்கண்ணியில் தங்கும் விடுதி அமைக்கும் பரிசீலனை அரசின் வசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.